# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**CC 576/2022**

**Deposition of Witness for PW3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ஜெயசீலன் | Caste | : | |
| Father/Husband Name | : | | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

**( All accused present )**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 12.03.2026**

**முதல் விசாரணை**

நான் தற்போது விக்கிரமங்கலம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். சார்பு ஆய்வாளர் ராஜேந்திரன் அவரையும் அவரது கையொப்பத்தையும் எனக்கு நன்கு தெரியும். நான் அவர்களுக்காக ஆவணங்களை பார்த்து, சாட்சி சொல்கிறேன். கடந்த 22.09.2022ஆம் தேதி 21.00 மணிக்கு சார்பு ஆய்வாளர் ராஜேந்திரன் விக்கிரமங்கலம் காவல் நிலைய பொறுப்பிலிருந்தபோது, உசிலம்பட்டி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அங்கு சென்று அங்குசிகிச்சையில் இருந்த தவமணி என்பவரை விசாரணை செய்து அவரது வாக்குமூலத்தை பெற்று பின்பு நிலையம் வந்து அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண் 119/2022 இதச பிரிவுகள் 294(b), 323, 324, 506(ii) வழக்கு பதிவு செய்துள்ளார். அந்த புகார் மற்றும்முதல் தகவல் அறிக்கை **(அ.சா.ஆ.1 மற்றும் அ.சா.ஆ.2)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு 23.09.2022 காலை 7.00 மணியளவில் சம்பவ இடத்தை பார்வையிட்டு, சாட்சிகள் பெருமாள், பிரேம்குமார் ஆகியோர்கள்

முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அவைகள் முறையே **(அ.சா.ஆ. 3 மற்றும் 4)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சாட்சிகள் தவமணி, பால்பாண்டி, பாண்டி, மதுரைவீரன், பரந்தாமன் ஆகியோர்களைளயும், மகசர் சாட்சிகளையும் தனித்தனியே விசாரணை செய்து, வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். எதிரிகள் சௌந்திரபாண்டி, ஆண்டிச்சாமி ஆகியோர்களையும் 23.09.2022ம் தேதி காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். மற்ற எதிரிகள் மாண்புமிகு மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்ஜாமீன் பெற்று நீதிமன்றத்தில் சரணடைந்து பிணையில் சென்றுள்ளார்கள். புகார்தாருக்கு கிசிச்சை அளித்த மருத்துவர் பாலமுருகன் என்பவரை விசாரித்து காயச்சான்று பெற்றுள்ளார். அந்த காயச்சான்று **(அ.சா.ஆ.5)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இறுதியாக சம்பவம் உண்மையென தெரியவந்ததால், எதிரிகளின் மீது மேற்சொன்ன பிரிவுகளின் கீழ் இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

அ.சா.1 கொடுத்த பொய்யான புகாரை பெற்று, சரிவர விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றல் சரியல்ல. சம்பவ சென்று சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றும், பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் ஆகியவற்றை காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இவ்வழக்கில் சரிவரபுலண்விசாரணை செய்யாமல், குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கு, இவ்வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.